லிருந்து வாங்குகிறபோது, அது நிச்சயமாக அரசுக்குச் சொந்த மாக இருக்கிற காரணத்தால் அதிலே தவறுகள் நடப்பதற்கு வாய்ப்பில்லை என்ற காரணத்தால்தான் அங்கு கொடுக்கப்பட் டிருக்கிறது. பல்லாயிரக்கணக்கான பேருக்கு வேலைவாய்ப்பு இல்லை என்று சொன்னார்கள். அதைப்பற்றி இரண்டு துறை களும் பார்த்து தனியாக நடவடிக்கை எடுக்கலாம்.

(இ) மணப்பாறை வட்டத்திலுள்ள சில கிராம மக்கள் பத்திரப் பதிவுக்காக விராலிமலை செல்லவேண்டியதில் உள்ள இடர்ப்பாடு.

திரு. க. சோலைராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, "திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டத்தில் உள்ள உசிலம்பட்டி, எப. கீரையூர், சாம்பட்டி, சூளியாம்பட்டி ஆகிய கிராமங்களில் வசிக்கின்ற மக்கள் பத்திரப் பதிவு சம்பந்த மாக மிக அருகில் உள்ள மணப்பாறையை விடுத்து, புதுக் கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த விராலிமலை பதிவு அலுவல கத்திற்குச் செல்ல வேண்டியிருப்பதால் அம்மக்களின் நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச் சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

திருச்சி பதிவு மாவட்டத்திலிருந்து புதுக்கோட்டை பதிவு மாவட்டம் தனியாகப் பிரிக்கப்பட்டு 10—5—1951 முதல் இயங்கி வருகிறது. திருச்சி வருவாய் மாவட்டத்தைச் சேர்ந்த உசிலம் பட்டி, கீரையூர், சாம்பட்டி, சூளியாம்பட்டி ஆகிய நான்கு கிராமங் களும் புதுக்கோட்டை பதிவு மாவட்டத்தைச் சேர்ந்த விராலி மலை சார்பதிவகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இந்நான்கு கிராமங்களும் விராலிமலை சார்பதிவகத்தைக் காட்டிலும் மணப்

1987 ஏப்ரல் 10] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

பாறை சார்பதிவகத்திற்கு அருகில் உள்ளன. விராலிமலை மற்றும் மணப்பாறை சார்பதிவகங்களுக்கும் இந்த நான்கு கிராமங்களுக்கும் உள்ள தூரம் விவரம் வருமாறு :—

வரிசை எண்.	கிராமம்	விராலிமலை சார்பதிவகத் திலிருந்து தூரம்.	மணப்பாறை சார்பதிவகத் திலிருந்து தூரம்.
1.	உசிலம்பட்டி	19 கி.மீ.	10 கி.மீ.
2,	சூளியாம்பட்டி	20 கி.மீ.	11 கி,மீ,
3.	சாம்பட்டி	18 கி.மீ.	9 கி.மீ.
4.	கீரையூர்	16 கி.மீ.	12 கி.மீ.

இந்த நான்கு கிராமங்களையும் விராலிமலை சார்பதிவகத்திலிருந்து பிரித்து மணப்பாறை சார்பதிவகத்துடன் இணைக்கும் கோரிக்கை ஒன்று 2—3—1987 அன்று பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. க. சோலைராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோன்று திருச்சி மாவட்டத்திலிருந்து, நீதிமன்றத்திற்கும், காவல் நிலையத்திற்கும் 50 கிலோமீட்டர் தொலைவிலுள்ள புதுக்கோட்டை மாநகரத்திற்கு எங்கள் பகுதி மக்கள் சென்று கொண்டிருந்த துன்பகரமான சூழ்நிலையை இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தபோது, ஒரே வாரத்தில் அந்தப் புதுக்கோட்டை மாவட்டத்திற்குச் செல்ல வேண்டிய துயரச் சூழ்நிலையைத் தவிர்த்து, திருச்சி மாவட்டம் மணப்பாறைக்குச் செல்லவேண்டிய ஒரு உத்தரவைப் பிறப்பித்தார்கள். அதற்கு இந்த நேரத்தில் எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், தொடர்புடைய அந்தப் பத்திரப் பதிவுத் துறையைச் சேர்ந்தவர்கள், திருச்சி மாவட்டம் மணப்பாறை மிக, மிக அருகிலே இருக்கின்றது. இந்த விவர அறிக்கையிலேகூட 10 கிலோமீட்டர், 12 கிலோமீட்டர் என்று தவறுதலாகப் போட்டிருக்கிறார்கள். 5 கிலோ மீட்டர், 6 கிலோமீட்டர் தூரத்திலே இருக்கிற மணப்பாறையை விடுத்து, 10 கிலோமீட்டர், 20 கிலோமீட்டர் தூரத்திலுள்ள விராலிமலைக்குச் செல்லவேண்டிய சூழ்நிலை இருப்பதால் மக்களுக்கு மிகவும் துன்பமான சூழ்நிலை

இருக்கிறது. எனவே, தயவுசெய்து, உடனடியாக மணப்பாறை யிலே அப்பகுதி மக்கள் பத்திரம் பதிவு செய்து கொள்ளலாம் என்கிற ஒரு அரசாணையை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல், மேற்கண்ட 4 ஊர்களும் மணப்பாறை சார்பதிவு அலுவலகத்திற்கு அருகில் உள்ளது என்பது தெளிவாகிறது. ஆனால் மக்கள் சார்பில் இப்போதுதான் முதன் முதலில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கோரிக்கையை விட்டிருக்கிறார்கள். அலுவலகத்திற்கு 2—3—1987-ல்தான் இதுமாதிரி மணப்பாறை சார்பதிவு அலுவலகத்துடன் சேர்க்க வேண்டும் என்று மனு வரப்பெற்றிருக்கிறது. ஆகவே, விரைவில், நீதிமன்றத்திற்கு நீதி வழங்கிய புரட்சித் தலைவர் ஆட்சியில் இதற்கும், மணப்பாறை சார்பதிவு அலுவலகத்துடன் இணைக்க ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

(ஈ) அதிக வருவாயுள்ள கோவில்களுக்கு கணக்கதிகாரிகள் நியமிக்கப்படாமலிருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் மா. மணிமாறன், ஆ. நடராசன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இந்து அறநிலையத் துறையின் கீழ் உள்ள அதிக வருவாய் உள்ள கோவில்களுக்கு, கணக்கதிகாரிகள் நியமிக்க 17—1—1985 ஆம் தேதியிட்ட அரசு ஆணை எண். 43-ல் வழிவகை செய்தும், இதுவரை அவ்வதிகாரிகள் நியமிக்கப்படாததால் அதிக வரவு-செலவு உள்ள கோவில்களின் கணக்குகள் சீர்கெடுவது குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.